**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, ERANIEL**

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

## C.C.No. 2/2023 P.W. 5 /L.W.4

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. மணிகண்டன் | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. பொன்னையா நாடார் | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 20.01.2025.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜரில்லை. மேற்படி ஆஜரின்மை நீதியின் நலன் கருதி கு.வி.மு.ச 1973 பிரிவு 317(1)ன் கீழ் அனுமதிக்கப்படுகிறது. குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்.**

**1.** நான் மேற்கண்ட முகவரியில் வசித்து சுயதொழில் செய்து வருகிறேன். 05.03.2022 ம் தேதி நுள்ளிவிளை அருகே எனது மகேந்திரா டெம்போவை நிறுத்தியிருந்தேன். மறுநாள் காலை 08.00 மணியளவில் நான் சென்று பார்த்த போது எனது டெம்போவில் இருந்த பேட்டரி காணாமல் போயிருந்தது. நான் நிறுத்தியிருந்த இடத்தில் மேலும், 4 வண்டிகள் நிறுத்தப்பட்டிருந்தன. அந்த வண்டிகளில் இருந்த பேட்டரிகளும் காணவில்லை. நாங்கள் அனைவரும் சேர்ந்து சம்பவம் சம்மந்தமாக காவல்நிலையம் சென்று கானிங் பிரபு என்பவர் புகார் கொடுத்தார்.

2. அதன் பிறகு 08.11.2022 ம் தேதி காவல்நிலையத்திலிருந்து என்னை அழைத்ததின் பேரில் நான் அங்குச்சென்றேன். நான் சென்று பார்த்தபோது திருட்டுப்போன பேட்டரி மற்றும் திருடிய நபர்களையும் போலீசார் பிடித்து வைத்திருந்தார்கள். அவர்களது பெயர் சிவா, கார்த்திக் என்றும் கூறினார்கள். நான் எனது வண்டியில் திருடப்பட்ட பேட்டரியை போலீசார் முன்னிலையில் அடையாளம் காட்டினேன். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை** :

வாகனம் என்னுடைய வாகனம் தான். என்னை போலீசார் 08ம் தேதி போன் செய்துக் கூப்பிட்டார்கள். போலீசார் தான் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களை அடையாளப்படுத்தினார்கள் என்றால் சரிதான்.

குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.